# 14 நம்பிக்கையில் உறுதி

கிறிஸ்தவரின் வாழ்க்கையில் இருக்கவேண்டியது நம்பிக்கை அன்பு ஆகிய இரு சிறந்த குணவியல்புகளாகும் என்பதை அறிந்து கொள்வோம். கிறிஸ்தவ அன்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை கடந்த பாடங்களில் கற்றோம். இப்பாடத்தின் மூலம் கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் இருக்க வேண்டிய நம்பிக்கையை உறுதியாக வளர்ச்சியடைய செய்யத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வோம்.



**வாசிப்போம்**
**மாற்கு 10: 46-52**

அம்மாவும் நானும் வழமைபோல் எரிகோவில் வசிக்கும் தாத்தா பாட்டியைப் பார்ப்பதற்காக வீட்டிலிருந்து சென்றோம். நாங்கள் வரும்வரை அவர்கள் எங்களை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு இருப்பார்கள். ஆனால் மற்றைய நாட்களைப் போல் அல்லாமல், இன்று வழி எல்லாம் ஒரே பரபரப்பாக இருந்தது. பாதையின் இரு பக்கமும் மக்கள் நிரம்பி நின்று யாரோ ஒரு புதியவரை எதிர்பார்த்து இருந்தார்கள் என்பதனை உணர்ந்தேன்.

''அம்மா இந்த பரபரப்பு எதற்கு? நாம் சற்று நின்று பார்ப்போம்'' என அம்மாவிடம் கூறினேன். எல்லா இடங்களிலும் மக்கள் நிரம்பி இருந்தனர். நாங்கள் நிற்பதற்குக்கூட இடம் இல்லை. ''மகனே இந்த மக்கள் இயேசு வரும்வரை வழியின் இருபக்கமும் நின்று பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள்.'' என அம்மா கூறினார்கள். நான் மிகுந்த ஆவலோடு அந்தப்பக்கம் பார்த்துக்கொண்டிருந்தேன். அதோ! இயேசு சீடர்களோடு வருகின்றார். என் மனதில் புதுமையான ஒரு மகிழ்வு. அதை வார்த்தைகளால்

விளக்கமுடியாது. இயேசுவைப் பற்றியும், அவர் செய்யும் புதுமையான செயல்களைப்பற்றியும் மட்டுமே கேள்விப்பட்டிருந்தேன். ஒரு நாளும் அவர் யார்? எப்படிப்பட்டவர்? என்பதை நான் அறிந்திருக்கவில்லை. இருப்பினும் இன்று புதுமையான சந்தர்ப்பம். அவரை வரவேற்பதற்காக மக்கள் ஓடிச்சென்றனர். பார்வை இழந்த ஒரு தாத்தா, வழியில் அமர்ந்து வருவோரிடம் உதவி கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த பார்வையற்ற தாத்தாவின் பெயர் பர்த்திமேயு என அம்மா ஒருநாள் கூறினார்கள். இவர் திமேயு என்பவரின் மகன் என பாட்டியம்மா கூறினார். எப்படி இருந்தாலும் இவர் மிகவும் ஏழையாக இருந்தார்.

''அதோ! நாசரேத்து இயேசு வருகிறார்'' என அவர் வரும்வழியைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் தாத்தாவிடம் கூறினார். தாத்தா உடனடியாக பதற்றமடைந்தார். ''தாவீதின் மகனே! எனக்கிரங்கும்'' என மிகவும் பெரிதாகச் சத்தமிட்டார். ''தயவுசெய்து சத்தத்தை நிறுத் துங்கள்'' என அநேகர் தாத்தாவை அதட்டினார்கள். இருப்பினும் பார்வையற்ற பர்த்திமேயு தாத்தா அதை நிறுத்தவேயில்லை. ''தாவீதின் மகனே,எனக்கிரங்கும்.'' என இன்னுமின்னும் உரக்கக்கத்தினார்!

''மகனே! அதோ இயேசு ஏதோ கூறுகின்றார். நாம் இன்னும் அருகில் செல்வோம்'' என் அம்மா என்னையும் பிடித்துக்கொண்டு பார்வையற்ற தாத்தாவின் அருகில் அழைத்துச்சென்றார். அப்போது நடப்பவைகளை தெளிவாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. இயேசு அருகில் இருந்தவரைப் பார்த்து அவரைக் கூப்பிடுங்கள் என்றார். அவர் '' துணிவுடன் எழுந்து வாரும் இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்.'' எனக்கூறி தாத்தா எழுந்து வருவதற்கு உதவிசெய்தார். ''அதோ பாருங்கள் அம்மா அந்தத் தாத்தா மேலுடையை எறிந்து விட்டு குதித்தெழுந்து ஓடுவதை.......''
''ஆம் மகனே அதோ பார், தாத்தாவின் முகத்தில் இருக்கும் சந்தோசத்தை பார்வையற்று இருந்தாலும் புதுமையான ஓர் உணர்வும் தெளிவும் அவர் முகத்தில் தோன்றியது'' என அம்மா கூறினார்.

இயேசு அவரைப்பார்த்து ''உமக்கு நான் என்ன செய்யவேண்டும் என விரும்புகிறீர்? எனக்கேட்டார். அதற்கு தாத்தா ''ஆண்டவரே நான் பார்வை பெற வேண்டும் என்றார். அதற்கு அவர் ''உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று''

என்று கூறியவுடன் தாத்தா பார்வை பெற்றார். ஆண்டவரின் வல்லமை மிகவும் புதுமையானது. அம்மா, இது புதுமையான அற்புதம், அங்கே பாருங்கள் தாத்தா பார்வைபெற்று மிகவும் சந்தோஷப்படுகிறார்.

பர்த்திமேயு தாத்தா அன்றுமுதல் வழியில் அமர்ந்து உதவி கேட்பதை நிறுத்தி இயேசுவைப் பின் தொடர்ந்தார். அனைவரும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். உண்மையாகவே இது ஒரு கனவு நிறைவேறியது போன்றது. ''ஆம், நம்பிக்கையினால் கனவு நிஜமாகும்''. ''அம்மா இது நம்பிக்கையின் புதுமை.'' ''ஆம் மகனே மெய்யான நம்பிக்கையினால் அநேக புதுமையான காரியங்களை அனுபவிக்கமுடியும்.'' அவ்வாறு கூறி அம்மா எனது தலையைத் தடவினார்கள்.

**பார்வையற்ற பர்த்திமேயு நம்பிக்கையினால் பார்வை பெற்றார்.**

(கிறிஸ்தவரில் இருக்க வேண்டிய இந்த நம்பிக்கை என்பது என்ன?)

நம்பிக்கை என்பது நாம்
எதிர்நோக்கி இருப்பவை
கிடைக்கும் என்னும் உறுதி.
கண்ணுக்குப் புலப்படாதவை
பற்றிய ஐயமற்ற நிலை
எபிரேயர். 11:1

இறைவனால்
அனைத்தும் செய்ய
முடியும் என்பதை
நம்புங்கள் அதுவே
நம்பிக்கை

**இறை வார்த்தைக்கூடாக நம்பிக்கையைப்பற்றி மேலும் தேடிப்பார்த்து குறிப்பிடுக.**

| | | |
|---|---|---|
| யாக்கோபு 2:17 | கலாத்தியர் 3:26 | லூக்கா 9:23 |
| மத்தேயு 17:20 | 1 திமொத்தேயு 6:12 | கலாத்தியர் 2:16 |

கிறிஸ்தவர்களான எங்களின் அனுதினவாழ்விற்கு

- நம்பிக்கையில் உறுதியாய் இருப்போம்.
- நம்பிக்கையோடே இயேசுவிடம் கிட்டிச்சேர்வோம்.
- நம்பிக்கையின் பிரதிபலனை அனுபவிப்போம்.
- நம்பிக்கையின் வல்லமையினால் வாழ்வை வெற்றி கொள்வோம்




வழிபடுவோம் இறைவனை விசுவாசத்துடன்
உயர்த்திடுவோம் இறைவனை விசுவாசத்துடன்
வேண்டிடுவோம் கடவுளை விசுவாசத்துடன்
இறைவன் பின் செல்வோம் விசுவாசத்துடன்.

வேதனை துன்பம் மத்தியில் விசுவாசத்துடன்
நோய் துன்பம் ஏற்படும்போது விசுவாசத்துடன்
தடைகள் பயங்கள் மத்தியில் விசுவாசத்துடன்
ஆண்டவரிடம் செல்வோம் விசுவாசத்துடன்

சுகம் பெறுவோம் மெய்யான விசுவாசத்துடன்
வெற்றி பெறுவோம் விசுவாசத்துடன்
வல்லமை பெலன் பெறுவோம் விசுவாசத்துடன்
ஆண்டவரின் மெய்யான விசுவாசத்துடன்

தேவ பிள்ளைகளாக விசுவாசத்துடன்
வாழ்ந்து செல்வோம் விசுவாசத்துடன்
கிறிஸ்துவுக்குள் உண்மை விசுவாசத்துடன்
முன்னோக்கி செல்வோம் விசுவாசத்துடன்

மனனவசனம்
எபிரேயர்: 11:1

**நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை**

செயற்பாடு

1 . நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டவாறு நம்பிக்கையினால் சுகம் பெற்றவர்களை அட்டவணைப்படுத்துக.